செ.வெ.எண்.06/2007 நாள்: 02.10.2007

**<u>கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளை முன்னிட்டு வையத்தில் வன்முறை தவிர்க்கும் நாள் உறுதி மொழி மாவட்ட கலெக்டர் தி. ந. வெங்கடேஷ் தலைமையில் ஏற்பு.</u>**

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளை முன்னிட்டு வையத்தில் வன்முறை தவிர்க்கும் நாள் உறுதிமொழி மாவட்ட கலெக்டர் தி. ந. வெங்கடேஷ், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், அனைத்து அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஏற்றுக் கொண்டனர்.

அண்ணல் காந்தியடிகளின் கொள்கைகளை கௌரவிக்கும் விதத்தில் அவருடைய பிறந்த நாளினை சர்வதேச அகிம்சை தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளதையொட்டி இன்று வையத்தில் வன்முறை தவிர்க்கும் நாள் உறுதிமொழியை மாவட்ட கலெக்டர் தி. ந. வெங்கடேஷ், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் உறுதிமொழியை சொல்லி ஏற்றுக்கொள்ள அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் திரும்ப சொல்லி உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர்.

**<u>உறுதிமொழி</u>**

பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ணிட வேண்டும். இதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும், அதிகாரமும் இருக்கிறது என்று அவர்கள் நினைத்திட வேண்டும். இந்நாட்டு மக்களில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடில்லாமல் அனைத்து வகுப்பினரும் நல்லிணக்கத்துடன் கூடி வாழ்ந்திட வேண்டும்; அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன். அத்தகைய இந்தியாவில், தீண்டாமை, மதிமயக்கிடும் மதுபானங்கள் மற்றும் போதைப் பொருள்கள் ஆகிய சாபக்கேடுகளுக்கு சிறிதும் இடமில்லை, பெண்களும் ஆண்களுக்குரிய அதே உரிமைகளை அடைந்து மகிழ்ந்திட வேண்டும்; உலகின் பிற பகுதிகளில் வாழும் அனைவருடனும் சேர்ந்து நாங்கள் அமைதியைப் பேணுவோம்.

நான் கனவு காணும் இந்தியா இதுதான்.

இந்த உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மு. மாதவி, மாவட்ட வழங்கல் அலுவலர் பி. ஜெயபால், பொதுமக்கள் குறைதீர்வு தனித்துணை ஆட்சியர் நடராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) எஸ். குப்புசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பஞ்சாயத்து வளர்ச்சி) பத்மநாபன், ஊராட்சிகள் உதவி இயக்குநர்(தணிக்கை) ராமமூர்த்தி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மணிவண்ணன், அலுவலக மேலாளர்கள் பி. நாராயணன், சீத்தாராமன், மற்றும் அனைத்து பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.